18.11.2025

அ.வ.எண்.820/2017

வா.சா.1 - துரைராஜ், த/பெ. கந்தசாமி

Solemnly affirmed and sworn by Tmt.A.Santhi, Assistant on 18.11.2025 is accordance with the provision of Act X of 3331

**1 ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. எங்களது டிரஸ்ட் 310, சென்னியாண்டவர் கோவில் வீதியில் செயல்பட்டு வருகிறது. 310 என்பது புல எண்ணா அல்லது கதவு எண்ணா என்றால் புல எண் ஆகும். டிரஸ்ட் சம்மந்தமான அலுவலகம் புல எண்.310 ல் இயங்கி வருகிறது என்றால் சரிதான். எங்களது அலுவலகத்தின் விஸ்தீரணம் எவ்வளவு என்றால் தெரியாது. மேற்படி அலுவலகம் கூரை வேய்ந்ததா என்றால் கோவில் வளாகம் தான். எங்களது அலுவலகமும், கோவில் வளாகமும், இரண்டும் ஒன்றுதான் என்றால் அது பற்றி தெரியாது. எங்களது டிரஸ்ட்டுக்கு நிறைய நபர்களிடம் நன்கொடை பெறுவது வழக்கம் என்றால் சரியல்ல.

2. எங்களது டிரஸ்ட் செவ்வனே இயங்க தேவையான மூலதனம் எங்கிருந்து வருகிறது என்றால் எங்களது உறவினர்களுக்குள் பணம் போடுவோம். டிரஸ்ட் பத்திரத்தில் உறவினர்களிடம் பணம் பெற்றுக்கொள்ளலாம் என்ற வாசகம் இல்லை என்றால் சரிதான். எனவே டிரஸ்டின் நோக்கத்திற்கு முரண்பட்டு பணத்தை நாங்கள் பல நபர்களிடம் மோசடியாக பெற்று கையாடல் செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. எங்களது உறவினர்களிடம் எவ்வளவு பணம், எந்த காலகட்டத்தில் பெறப்பட்டது என்றால் அது பற்றி தெரியாது. எங்களது டிரஸ்ட்டிற்கு தொடர்பு முகவரி உள்ளது என்றால் சரியாக தெரியவில்லை.

3. டிரஸ்ட்டின் நோக்கத்தை செயல்படுத்த அன்னதான மடம் நடத்தி வருகிறோம் என வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அன்னதான மடம் நடத்த தேவையான பணத்தை யார் யாரிடம் வசூலிப்போம் என்றால் எனது குடும்ப உறுப்பினர்கள் மற்றும் டிரஸ்ட் உறுப்பினர்கள் சேர்ந்து செய்கிறோம். எனது குடும்ப உறுப்பினர்கள் மற்றும் டிரஸ்ட் உறுப்பினர்கள் சேர்ந்து டிரஸ்ட்

பெயரில் பணம் வசூல் செய்யப்பட்டது என்றும், அவ்வாறு வசூல் செய்யப்பட்ட பணத்தை முறையாக வங்கி கணக்கை தொடங்கி அந்த வங்கி கணக்கிற்குரிய வரவு, செலவுகளை ஆண்டறிக்கையாக தாக்கல் செய்து உரிய அதிகாரிகளிடம் தாக்கல் செய்யவில்லை என்றால் அது பற்றி தெரியாது.

4. டிரஸ்ட் சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாத காரணத்தால், என்னிடம் இருந்து உண்மையாகவே மேற்படி டிரஸ்ட் செவ்வனே இயங்கியதா என்றும், கணக்கு வரவு, செலவுகள் சரியாக பாக்கப்பட்டதா என்றும், வங்கி கணக்கு முறையாக ஆரம்பம் செய்யப்பட்டதா என்று எனக்கு தெரியாததால் நான் டிரஸ்ட்டின் அடிப்படை உறுப்பினர் கூட இல்லை என்பதாலும், அயிட்டம் 2 சொத்தை பொறுத்து நான் சத்திய பிரமாணத்தின் பெயரில் சாட்சியம் அளிக்க தகுதியற்ற நபர் என்றால் சரியல்ல, நான் அறக்கட்டளைக்காக வழக்கு தாக்கல் செய்யவில்லை, கோவிலுக்கு செல்லும் தடத்தை அடைத்துள்ளார்கள், அதற்காக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன்.

5. சென்னியாண்டவர் கோவில் புல எண்.310 ல் அமைந்துள்ளது, வழக்கு தாக்கல் செய்யும்போது தடமாக இருந்தது. பின்னிட்டு தடத்தில் 1ம் பிரதிவாதி வீடு கட்டி வழியை ஆக்கிரமிப்பு செய்துள்ளார். புல எண்.310 உட்பிரிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். அவ்வாறு உட்பிரிவு செய்யப்பட்டுள்ளதில், சென்னியாண்டவர் கோவில் எந்த உட்பிரிவில் உள்ளது என்றால் புல எண்.310/1 ல் பிரகாரம் உள்ளது. புல எண்.310/2 ல் மண்டபம் உள்ளது. புல எண்.310/1 ல் பிரகாரம் உள்ளது என்றும், புல எண்.310/2 ல் மண்டபம் உள்ளது என்றும் வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம். மேற்கண்டவாறு என்னிடம் காட்டப்படும் வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லவில்லை. சென்னியாண்டவர் கோவில் உள்ளதாக சொல்லியுள்ளேன்.

6. நீதிமன்ற ஆணையர் அறிக்கையிலும் மண்டபம் உள்ளது என்றும், பிரகாரம் உள்ளது என்றும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் ஒரே படமாகத்தான் உள்ளது. மண்டபம் எவ்வளவு விஸ்தீரணத்தில் உள்ளது என்றால் ஓட்டு வீடு அளவு தெரியவில்லை. நான் சொல்வது போல் சென்னியாண்டவர் கோவிலில் மண்டபம்

இல்லை என்றால் சரியல்ல. சென்னியாண்டவர் கோவில் எங்களது குடும்பத்திற்கு பாத்தியப்பட்ட கோவில் என்றால் சரியல்ல. மேற்படி கோவில் குல தெய்வ கோவில் அல்ல என்றால் சரியல்ல. என்னுடைய குல தெய்வ கோவில் திருப்பூர் மாவட்டம், வெங்கட்கல்பாளையத்தில் அமைந்துள்ளது என்றும், எங்களது குல தெய்வம் பெண் தெய்வம் என்றால் சரிதான். சென்னியாண்டவர் கோவில் வம்சாவழியாக வழிபட்டு வந்தது.

7. கோவிலுக்கு செல்லும் பாதையை நான் எந்த ஆவணத்தின் அடிப்படையில் உரிமை கோருகிறேன் என்றால் பரம்பரையாக சென்று வந்த வழி தான். 1950 ம் ஆண்டு பாகப்பிரிவினை ஆவணத்தை வழக்கு தாக்கல் செய்யும்போது தாக்கல் செய்யவில்லை என்றும், அதற்கு பின்னிட்டு மனுத்தாக்கல் செய்து மேற்படி ஆவணத்தை குறியீடு செய்துள்ளேன் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தை எதற்காக தாக்கல் செய்துள்ளேன் என்றால் அது குடும்ப கோவில் தாத்தா காலம் முதல் இருந்து வருகிறது. அனைத்து பாகஸ்தர்களும் குல தெய்வ கோவிலுக்கு சென்று பூஜை செய்து வர அனைத்து பாகஸ்தர்களுக்கும் பாத்தியம் உள்ளது.

8. வா.சா.ஆ.10 பாகப்பிரிவினை ஆவணத்தின் படி என் தாத்தா கே.எஸ். சென்னிமலை கவுண்டருக்கு எந்த பாகம் ஒதுக்கப்பட்டது என்றால் D அட்டவணை சொத்து ஒதுக்கப்பட்டது. அதில் என் தாத்தா எவ்வாறு சொத்தை பயன்படுத்த வேண்டும் என்று பொது ஷரா கண்டுள்ளது என்றால் ஆவணத்தை முழுமையாக பார்க்கவேண்டும். என் தாத்தாவிற்கு ஒதுக்கப்பட்ட பாகப்பிரிவினை சொத்துக்களை மேற்படி ஆவணத்தில் கண்ட பொது ஷராவின் படி அதாவது பழனிக்கவுண்டருக்கு பாத்தியப்பட்ட சொத்தில் தென்வடலாக செல்லும், வண்டித்தடத்தின் வழியாக சென்று மேற்படி பூமிகளை ஆண்டு அனுபவித்து வந்தார் என்றால் சரியல்ல. புல எண்.310/3 காலைக்கு செல்வதற்கு மட்டும்தான் அந்த வழியாகும்.

9. புல எண்.310/3 பூமி என் தாத்தாவிற்கு பாகப்பிரிவினையின் படி ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். என் தாத்தா உயிருடன் இருந்த காலத்தில், என்னுடைய தகப்பனார் மற்றும் 1ம் பிரதிவாதி மற்றும் அவருடைய

சகோதரர்களுக்கிடையே 2001ம் ஆண்டில் பாகம் ஏற்படுத்தி கொண்டனர் என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தில் என் தாத்தா சென்னிமலைகவுண்டர் எவ்வாறு ஆண்டு அனுபவித்து வந்தாரோ அதன் அடிப்படையிலேயே 2001ம் ஆண்டு பாகப்பிரிவினை செய்து கொண்டார் என்றும் அந்த பாகப்பிரிவினையின் அடிப்படையில் அந்த பாகப்பிரிவினையில் கண்ட வழித்தடங்களுக்குரிய வாசகங்களின் அடிப்படையில் தான் என் தந்தை 1ம் வாதியும், அதற்கு பின்னிட்டு நானும், 1ம் பிரதிவாதியும் நாளது தேதி வரை ஆண்டு அனுபவித்து வருகிறோம் என்றால் ஆவணத்தில் சொன்ன தடமும் உள்ளது, அதை தவிர பூர்வீக தடமும் உள்ளது.

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

மேலும் குறுக்குவிசாரணை தொடர்ச்சி வேண்டுகோளின் படி ஒத்தி வைக்கப்படுகிறது.

Taken down by me to open court read over to the witness and acknowledged by him / her to be correct

Sd.M.Santhosham
District Munsif, Sulur